இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 336 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 01 – வெள்ளிக்கிழமை 17 ஜூலை 2026 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 336 : Thiruvalluvar Year - 2057 - Aadi 01 - Friday 17 July 2026 - Trichy ★★ 8 Pages ₹ 5.00

## தலைமுறைகள் தழைக்க

# கல்விக்கண் திறந்தவர் கர்மவீரர் காமராசர்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை, ஜூலை 17-**

**பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், ‘தலைமுறைகள் தழைக்கக் கல்விக் கண் திறந்த கர்மவீரர்’ என்று புகழாரம் சூட்டியுள்ளார்.**

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக தலைதளப் பதிவு வருமாறு:-

தமிழ்நாட்டின் கல்வி, தொழில், வேளாண் வளர்ச்சிக்கு வலுவான அடித்தளம் அமைத்த பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளில் அவருக்கு என் புகழ் வணக்கம்!



மாற்று இயக்கத்தில் இருந்தாலும் தந்தை பெரியாரால் பச்சைத் தமிழர் எனப் பாராட்டப்பட்டு, அவரது எண்ணங்களைச் செயல்படுத்தியவர் காமராசர்.

பேரறிஞர் அண்ணாவால் பெரிதும் மதிக்கப்பட்டவர்.

### நெருக்கடி நிலையில் கலைஞருக்கு ஆதரவாக நின்றவர்!

நெருக்கடி நிலையை அறிவித்தபோது அதை எதிர்த்து முத்தமிழறிஞர் கலைஞருக்கு ஆதரவாக நின்றவர்.

உடல்நிலை சரியில்லாத போதும் எனது திருமணத்துக்கு நேரில் வந்து வாழ்த்திய பெருந்தகையாளர்.

### கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தார் கலைஞர்!

காமராசர் அவர்களின் பிறந்தநாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்தார் முத்தமிழறிஞர் கலைஞர்.

அவரது வழியிலான நமது “DravidianModel” அரசிலும்,

* காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம்,
* பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்துக்கு முக்கியக் காரணமாக அமைந்த அவருக்குத் திருவுருவச் சிலை,



### திருச்சியில் காமராசர் பெயரில் மாபெரும் நூலகம்!

* திருச்சியில் உலகத் தரத்தில் தயாராகி வரும் மாபெரும் நூலகத்துக்குக் காமராசர் அவர்களின் பெயர் எனப் பெருந்தலைவரின் புகழ்போற்றும் அரசினை நடத்தினோம்!

தலைமுறைகள் தழைக்கக் கல்விக்கண் திறந்த கர்மவீரரின் புகழ் தமிழ்நாடுள்ள மட்டும் நிலைத்திருக்கும்!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

## முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுக்கு எதிராக வழக்கு!

# த.வெ.க. அரசுக்கு உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்!

## மனுவைத் தள்ளுபடி செய்து அரசுக்கு சரமாரிக் கேள்வி!

புதுடெல்லி, ஜூன் 17-

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுக்கு எதிராக த.வெ.க. அரசு தொடர்ந்த மனுவை தள்ளுபடி செய்து உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலுவுக்கு எதிராக த.வெ.க. அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

இந்த வழக்கை கடந்த வாரம் விசாரித்த நீதிமன்றம், தமிழ்நாடு அரசின் ‘லுக் அவுட்’ நோட்



டீஸ்க்கு தடை விதித்து உத்தரவிட்டது.

மேலும், ஜூலை 28 வரை எ.வ.வேலு மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது என்றும் சென்னை உயர் நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது.

இந்த வழக்கு நீதிபதி விக்ரம் நாத் தலைமையிலான அமர்வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது, தமிழ்நாடு அரசின் மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

மேலும், பாஸ் போர்ட்டை சரண்டர் செய்ய வேண்டும் என்ற தமிழ்நாடு அரசின் கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டது.

வெளிநாடு சென்றவர் தற்போது திரும்பி வந்து விட்டாரே? அவரிடம் விசாரணை நடத்துவதில் உங்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது? விசாரணைக்கு ஒத்துழைப்பதாக தெரிவித்திருக்கிறார்.

அவர் விசாரணைக்கு எந்த எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. அப்படி இருக்கும்போது அவரிடம் விசாரிப்பதில் உங்களுக்கு ஏதேனும் பிரச்சினை இருக்கிறதா? என்று கேள்வி எழுப்பிய நீதிபதிகள் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

## விராலிமலை தொகுதி வாக்காளர்களுக்கு

# ஃபிரிட்ஜ் வாங்க கூப்பன் வழங்கி முறைகேடாக வெற்றி!

## தி.மு.க. தொடர்ந்த தேர்தல் வழக்கில் சி.விஜயபாஸ்கருக்கு உயர்நீதிமன்றம் நோட்டீஸ்!

சென்னை, ஜூலை 17-

விராலிமலை தொகுதி வாக்காளர்களுக்கு ஃபிரிட்ஜ் வாங்க கூப்பன் கொடுத்து முறைகேடாக வெற்றி பெற்றதாக தி.மு.க. தொடர்ந்த தேர்தல் வழக்கில், முன்னாள் அமைச்சர் சி.விஜய பாஸ்கர் பதிலளிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடந்த முடிந்த சட்ட மன்றத் தேர்தலில் விராலிமலை தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட சி.விஜயபாஸ்கர், வெற்றி பெற்றார்.

இவரது வெற்றியை எதிர்த்து, தி.மு.க. வேட்பாளர் செல்லப்பாண்டியன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். தேர்தல் பிரச்சாரத்தின்போது வாக்காளர்கள் தனக்கு ஆதரவாக வாக்களிக்க, 10,000 மற்றும் 2,000 ரூபாய் டோக்கன் மற்றும் ப்ரிட்ஜ் வாங்க கூப்பன்களை சி.விஜய பாஸ்கர் விநியோகித்து தேர்தல் முறைகேட்டில் ஈடுபட்டதாகவும் இதனால் அவரது வெற்றியை செல்லாது என அறிவிக்க வேண்டும் என மனுவில் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி என்.செந்தில்குமார் அடங்கிய அமர்வு, சி.விஜயபாஸ்கர் மற்றும் தேர்தல் ஆணையம் பதில் அளிக்க உத்தரவிட்டு, விசாரணையை மூன்று வாரங்களுக்கு தள்ளி வைத்தது.

## மாம்பாக்கம் ஊராட்சியில் சம்பவம்: ரூ.9.80 இலட்சம் பணத்தை விடுவிக்க

# ரூ.1.30 இலட்சம் லஞ்சம் பெற்ற த.வெ.க. நிர்வாகி!

## சமூக வலைதளங்களில் வைரலாகப் பரவும் வீடியோ!

செங்கல்பட்டு, ஜூலை 17-

தமிழ்நாட்டில் த.வெ.க. புதிதாக ஆட்சி அமைத்து இரண்டு மாதங்கள் கடந்துள்ள நிலையில், லஞ்சம் இல்லாத ஆட்சியை இந்த ஆட்சி வழங்கும் என த.வெ.க. தொடர்ச்சியாக கூறி வந்த நிலையில், செங்கல்பட்டு மாவட்டம், மாம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவரும், செங்கல்பட்டு கிழக்கு மாவட்ட த.வெ.க. இணைச் செயலாளருமான வீரா, ரூ. 1.30 லட்சம் ஒப்பந்ததாரரிடம் லஞ்சம் பெற்றதாக வீடியோ காட்சி ஒன்று வெளியாகி சோஷியல் மீடியாவில் தீயாய் பரவி கொண்டிருக்கிறது.

மாம்பாக்கம் பகுதியில் சிமெண்ட் சாலை பணி நடக்கிறது.

இதற்காக ஒப்பந்ததாரரிடம் 9 லட்சத்து 80 ஆயிரம் பணத்தை விடுவிப்பதற்கு அவரிடம் லஞ்சம் கேட்டதாக கூறப்படுகிறது.

இதற்காக ஜிபேவில் முதற்கட்டமாக ஐம்பது ஆயிரம், இரண்டாம் கட்டமாக ஐம்பது ஆயிரம் கொடுத்துள்ளார்.

தொடர்ந்து மூன்றாவது முறையாக 30 ஆயிரம் கொடுத்துள்ளார்.

அதனை இணைச் செயலாளர் வீரா பெற்றுக் கொள்வதை போன்ற காட்சிகளும் அந்த வீடியோவில் இடம்பெற்றுள்ளன.

மேலும், எவ்வளவு இருக்கிறது என்றும் வீரா கேட்கிறார். அதற்கு அவர் 30, ஏற்கனவே உனக்கு அனுபிட்டேன்ல எனவும் சொல்கிறார். இப்படியான காட்சிகள் வீடியோவில் இடம்பெற்று வைரலாகி வருகின்றன.



கல்விக்கண் திறந்த பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, ஓட்டப்பிடாரம் ஊராட்சி ஒன்றியம், வேப்பலோடை கிராமத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு கழகத் துணைப் பொதுச் செயலாளர் – கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் கீதாஜீவன், விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி.மார்கண்டேயன், தூத்துக்குடி மாநகர மேயர் ஜெகன் பெரியசாமி, ஒன்றியச் செயலாளர் காசிவிஸ்வநாதன், சின்னமாரி முத்து, ராமசுப்பு, அன்புராஜன், விளாத்திகுளம் பேரூர்க் கழகச் செயலாளர் வேலுச்சாமி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.